<u>**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

<u>**C.C. No. 238/2025**</u>

Deposition of LW 14 | Additional witness Examined as :PW5

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : அன்பழகன் | Defence | : |
| Father Name | : சின்னதம்பி | Court | : |
| Village | : சிறப்பு உதவி ஆய்வாளர், செம்பனார்கோவில் காவல் நிலையம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 52/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 04.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. (U/s 355 BNSS Act ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் தற்போது செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் உதவி ஆய்வாளர் ராஜாராமன், காவல் ஆய்வாளர் அனந்தபத்மநாபன் ஆகியோர்களின் கையெழுத்து நன்கு பரிட்சையம், இந்த வழக்கின் சாட்சிகள் போலிசார் விசாரணைக்கு மாறுப்பட்ட சாட்சியங்கள் அளித்திருப்பதால் ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.03.2020ம் தேதி இரவு 21.00 மணிக்கு செம்பனார்கோவில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ராஜராஜன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது ரவி த/பெ. கலியபெருமாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்றார். அந்த **புகார் மனு அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** பின்னர் காவல் நிலைய குற்ற எண் 97/2020, இதச பிரிவு 304(A) என்ற சட்டப்பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேற்கண்ட வழக்கு ஆவணங்களை காவல் ஆய்வாளர் அனந்தபத்மநாபன் மேல் விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு **பார்வைமகசர் மற்றும் வரைபடத்தினை தயார் செய்தார் அவை முறையே அசாஆ 5 மற்றும் அசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது,** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை தனித்தனியே பதிவு செய்தார்.

3. பின்னர் விபத்தில் காயம்பட்ட கலியபெருமாள் இறந்துவிட்டதால் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனை முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து முடிக்கப்பட்டது. அந்த **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனைக்கு சென்று பிரேத விசாரணை செய்த மருத்துவர் ஸ்ரீதர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். அந்த **பிரேத பரிசோதனை சான்று அசாஆ8 ஆக குறியீடு செய்யபடுகிறது.**

4. பின்பு வழக்கில் சம்மந்தபட்ட எதிரியை கடந்த 05.03.2020 ம்தேதி 14.15 மணிக்கு குரங்குபுத்தூர் மெயின்ரோட்டில் உள்ள எதிரியின்வீட்டு வாசலில் வைத்து குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இந்த விபத்தில் ஈடுபட்ட நான்கு சக்கர வாகனம் TN 68H 0105 என்ற பதிவெண் கொண்ட Maxi Cab வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு உட்படுத்தி ஆய்வாளர் ராம்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் கொடுத்த சான்றிதழை பெற்றார். **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து கடந்த 12.03.2020ம் தேதி, இதச பிரிவு 304(A) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த விபத்து எதிரியின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவரின் அஜாக்ரதைதான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. மோட்டார்

வாகன சட்டப்படி இழப்பீடு பெறுவதற்காக தவறான சங்கதிகளின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாரினை ஆய்வாளர் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிமீது வழக்கு பதிவு செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**